Register as a N paper Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28௳ திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ௫௫] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஐப்பசி௴ ௨௯௳ (1943 நவம்பர்௴ 15 திங்கட்கிழமை) [இல. ௯௧

## அதிகாரிகளை மலேரியாவி லிருந்து பாதுகாத்தல்

கொசு, சங்காரியும் வலையும் 'சப்ளை' செய்ய உத்தேசம்

மலேரியாநோய் பரவுங்காலங் களிலும் திருவிழாக் காலங்களிலும் மலேரியா நோயுள்ள டிஸ்திரிக்குக ளில் விசேஷ கடமையாற்ற அனுப் பப்படும் வைத்திய சுகாதார அதி காரிகளுக்கும் வெளி வேலை வைத் திய அதிகாரிகளுக்கும் சுகாதார உதவியாளர்களுக்கும் வைத்தியப் பகுதியின் ஏனைய உத்தியோகஸ் தர்களுக்கும் மலேரியா நோயிலி ருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மடக்குக் கட்டில் களும் கொசுவலைகளும் ஏனைய சாத னங்களும் 'சப்ளை' செய்ய உத்தே சிக்கப்பட்டிருக்கிறது.

மலேரியா நோயைக் குணப்படுத் தும் அல்லது தடுக்கும் வேலையில ஈடுபட்டிருக்கும் எல்லா வைத்திய அதிகாரிகளுக்கும் அவர்கள் குடியி ருக்கும் ஸ்தலத்திலுள்ள கொசுக் களைக் கொல்லுவதற்கான மருந்து களும், அம்மருந்தைத் தெளிக்கும் உபகரணமும் கொடுக்கவும் உத் தேசிக்கப்பட்டிருக்கிறது. வைத்தி யப்பகுதிக்குக் கூடுதலான கொசு சங்காரி மருந்தும் அதைத் தெளிக் கும் உபகரணமும் கிடைக்கும் போது மலேரியா நோய் பரவும் பிராந்தியங்களில் வேலைக்கமர்த்தப் பட்டிருக்கும் வைத்திய அதிகாரி களுக்கும் இந்த வசதிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

மலேரியாப் பகுதிகளிற் பொது வைத்திய அதிகாரிகளை நீண்டகா லத்துக்குக் கடமையாற்றவிடும் இப்போதைய முறை மாற்றியமைக் கப்பட வேண்டுமென்றும் உத்தே சிக்கப்படுகிறது. இரண்டு முதல் மூன்றரை வருடங்களவரை மட்டு மே ஒரு வைத்திய அதிகாரி மலே ரியாப்பகுதியிற் கடமைபார்க்கும் படி கேட்கப்படுவார்.

வைத்தியப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் மலேரியாப்பகுதிகளிற் கடமையாற்ற அனுப்பப்படும்போ து அல்லது அந்தகைய பகுதிக ளில் விசேஷ கடமையாற்றச் செல் லும்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வசதிகளை ஏற்ப டுத்தும் நோக்கமாகவே இந் நட வடிக்கைகளை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## சென்னை கோர்ப்பொரே ஷன் புதிய மேயர்

டாக்டர் நியமதுல்லா ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்

சென்னை நவ 10—

ரிப்பன் கட்டிடத்தில் நேற்று மாலை 5-15 மணிக்கு நகர கோர்ப் பொரேஷன் கூட்டம் நடந்தபோது டாக்டர். ஸையது நியமதுல்லா ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட் டார்.

# இலங்கைத் தொழிலாளரும் மந்திரி சபையும்

## கைக்கொள்ளவிருக்கும் நடவடிக்கை

குடியேற்றநாட்டு மந்திரியின் தொழில் ஆலோசகர் மேஜர். ஜி. செண்ட் ஜே. ஓர்டி. பிரௌ னின் சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று தொ ழில் வர்த்தக நிர்வாகசபை கூறிய ஆலோசனைகளை மந்திரிசபை அங்கீ கரித்துவிட்டதென்று அறியப்படு கிறது.

நிர்வாகசபை இது விஷயமாக அரசாங்கசபையில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க உத்தேசித்தது.

அவ்விதஞ் செய்யவேண்டிய அவ சியமில்லையென்றும் தொழில் வர்த் தக மந்திரி தொழிற்கட்டுப்பாட் டதிகாரி இலாகாவை விஸ்தரிப்ப தற்கு வேண்டிய உபமான்யப் பிரே ரணைகளை அரசாங்கசபையிற் கொ ண்டுவந்து அதற்குப்பின்னர் இலங் கையிலுள்ள இந்தியத் தொழிலாளி களுக்குள்ள சகல உரிமைகளும் சிங் களத் தொழிலாளர்களுக்கும் வழங் கப்படவேண்டுமென்ற மேஜர். ஓர்டி பிரௌணின் சிபார்சை அனுஷ்டா னத்துக்குக் கொண்டு வருவதற் கான சட்டத்தைக் கொண்டுவரலா மென்று மந்திரிசபை அபிப்பிராயந் தெரிவித்திருப்பதாக அறியப்படு கிறது.

வைத்திய உதவிச் சட்டத்தின் சகாயங்கள் சிங்களத் தொழிலாளி களுக்கு கிடைக்கச் செய்வதற்கான சட்டமும் சிறந்த குடியிருப்பு வச திக்கான சட்டமும் கொண்டுவரப் பட்டால் இந்தியத் தொழிலாளிக ளுக்குள்ள உரிமைகளும் வசதிக ளும் சிங்களத் தொழிலாளிகளுக் கும் கிடைத்துவிடும்.

இது விஷயம் இப்பொழுது தொ ழில் வர்த்தக மந்திரி காரியாலயத் தின் கவனத்திலிருந்து வருகிறது

## 500 விமானங்களின் படையெடுப்பு

வடபிரான்ஸிலுள்ள இலக்குகள் தாக்கப்பட்டன

லண்டன் நவ 10—

வடபிரான்ஸிலிருக்கும் சத்துரு இலக்குகள்மீது இன்று யுத்தவிமா னப் படைப்பிரிவு தாக்குதல் நடத் தியதென்றும் அந்தத் தாக்குதலில் 500 விமானங்கள் பங்கெடுத்துக் கொண்டனவென்றும் இன்று வெ ளியிடப்பட்ட உத்தியோக பூர்வ மான அறிக்கை கூறுகிறது.

ஒரு சில ஜெர்மன் விமானங்களே உயர எழும்பி நேசதேச விமானங் களை எதிர்க்க வந்தன. பெல்ஜியத்தி லிருக்கும் சத்துரு விமான நிலையங் களை அமெரிக்க வெடிகுண்டு விமா னங்கள் தாக்கின.

## மூன்று பிரமுகர்களின் சந்திப்பு

வாஷிங்டனில் ஏற்பாடு நடைபெறுகிறதாம்

வாஷிங்டன் நவ 10—

ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் சந்திப்புக்கான ஏற்பாடுகள் வாஷிங் டனில் திருப்திகரமாக நடைபெறு கின்றனவென்று அறிவிக்கப்படு கிறது.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தமது இராணுவ ஆலோசகர்களான ஜென ரல் மார்ஷல், அட்மிரல் கிங், ஜென ரல் ஆர்னோல்ட், கர்னல் நாக்ஸ் ஆகியோருடன் சமீபத்தில் நடத் திய சம்பாஷணை இந்த "மூன்று பிரமுகர்"களினதும் சந்திப்பு ஆர ம்ப நடவடிக்கையென்று இங்கு நம் பப்படுகிறது.

## இந்திய சட்டசபைக் கூட்டம்

அவசரப் பிரேரணை நிறைவேறியது

லண்டன் நவ 9—

உணவு நெருக்கடி வேறு மற்ற விவகாரங்கள் இவற்றின் காரணமாகக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் டில்லி மத்திய அசெம்பிளி கூட்டத்துக் குச் சமுகமாயிருக்கத் தீர்மானித் திருக்கின்றனர்.

இந்திய யுத்த முயற்சியைப் பற் றிப் பிரிட்டனிலும், அமெரிக்காவி லும் பிரசாரஞ் செய்வதற்காகச் சுற்றுப்பிரயாணஞ் செய்யும்படி இந்திய அரசாங்க அதிகாரப்பற் றற்ற கனவான்களை அனுப்பத் தீர் மானித்திருப்பது புத்திசாலித்தன மற்ற செய்கை என்று இந்திய அர சாங்கத்தைக் கண்டித்துக்கொண்டு வந்த அவசரத் தீர்மானம் நிறை வேறிற்று. இதில் அரசாங்கம் தோல் வியடைந்தது. தீர்மானத்துக்குச் சாதகமாக 43 வாக்குகளும் விரோ தமாக 39 வாக்குகளும் கிடைத் தன. முடிவு அறிவிக்கப்பட்டதும் "ராஜிநாமா செய்யுங்கள்" என்ற கூக்குரல் கிளம்பிற்று.

காங்கிரஸ் அங்கத்தினர்கள் முஸ்லிம் லீக், தேசியக்கட்சி, சுயே ச்சைக்கட்சி முதலிய அங்கத்தின ருடன் சேர்ந்து வாக்களித்தனர்.

இந்திய அரசாங்கத்தின் நடத் தைகளை வெளியடித்து மறைக் கவே இவ்வித பேர்வழிகள் தூதுக் கோஷ்டியினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர் என்று பலத்த கண்டனங்கள் செய்யப்பட்டன.

## இத்தாலியில் ஜெர்மன் அணி தகர்க்கப்படுகிறது

பல குன்றுகளிலிருந்து நாஜியர் விரட்டப்பட்டனர்

வடஆபிரிக்காவிலுள்ள நேசசா ணுவ தலைமைக்காரியாலயம் நவ 11 ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு கூறுகிறார்:—

இஸெர்னியாவுக்கு வடக்கிலிருக் கும் பிரதானபாதையில் இப்போது 8வது சேனை தகர்த்துக்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஜெனரல் மாண்ட் கொமெரியின் இடது பாரிசப் படைகள் ஜெர்மன் அணிகளுக்கூடே வெகுதூரம் முன் னேறிவிட்டன.

மத்திய இத்தாலியிலிருக்கும் முக்கிய பாதையில் இப்போது பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அப்பினை மலைப் பிராந்தியத்தை ஊடுருவிக் கொண்டு 5வது சேனை முன்னேறிக் கொண்டிருக்கிறது. ரோமாபுரிக்குச் செல்லும் உள்நாட்டுப்பாதையிலிருக் கும் குன்றுகளிலிருந்து ஜெனரல் கிளார்க்கின் துருப்புகள் ஜெர்மானி யர்களை விரட்டியடித்துக்கொண்டி ருக்கின்றன. ஜெர்மானியரின் போக் குவரத்துக்கள் இரண்டு பக்கங்க ளாலபயமுறுத்தப்பட்டிருக்கின்றன

ஜெர்மன் தளத்துக்கு ஆபத்து

ஒரு பக்கத்தால் 8வது சேனை முன்னேற இன்னொருபக்கத்தால் 5வது சேனை முன்னேறுகிறது. ஜெர்மன் தளம் முழுவதுக்குமே இப்போது 5வது சேனையால் ஆபத் தேற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர் 5வது சேனையை உக்கிரமாகத் தாக் கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அதிகமான சேதமேற்பட்டுக் கொண்டிருப்பதால் அவர்களுடைய எதிர்த்தாக்குதல் களும் வலுவற்ற பலங்குறைந்தவை களாகவே இருக்கின்றன. ஒரு இடத்தில ஜெர்மானியர் தங்களு டைய முழுப் பலத்தையும் திரட்டி மிக பூர்வகமான எதிர்த்தாக்குத லொன்று நடத்தினர். ஆனால் அந் தத் தாக்குதல நேசதேசப் பிரஜை களாலசின்னாபின்னமாக்கப்பட்டது.

## மாத்தறைப் பொலிஸ் வழக்கு

எதிரிகளின் அப்பீல் மனு

மாத்தறைப் பொலிஸ் வழக்கில் நீதிபதி மின்றர் ரூட்ஸ் விதித்திருந் த தீர்ப்பையும் தண்டனையையும் ஆட்சேபித்துக் கொன்ஸ்டேபிள்க ளான நான்கு எதிரிகள் அப்பீல் செய்திருக்கின்றனர்.

குறித்தநால்வரும் சென்றவருடம் மார்ச்மாதம் மாத்தறைப் பொலிஸ் நிலையத்தில்மரணமடைந்த ஹினனி அப்புவை வேண்டுமென்று தாக்கிப் பலத்த காயமிழைத்ததாகக் குற் றஞ்சாட்டப்பட்டிருந்தனர். நீதிபதி எதிரிகளுக்கு இரண்டு வருடக்கடுங் காவல் சிறை விதித்திருந்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் பொன்னுச் சாமி குறித்த குற்றத்திற்கு உடந் தையாகவிருந்ததற்காக இரண்டு வருடச்சிறைவிதிக்கப்பட்டிருந்தார்.

'அப்பீல' விசாரணை இம்மாதம் 29ந் தேதிக்குக் குறிப்பிடப்பட் டிருக்கிறது.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஐப்பசி௴ உகூஉ திங்கட்கிழமை

## காதல்

I

காதல் இருவகைப்படும்; தெய்வத்தினிடத்து வைத்த காதல் ஒன்று; மனைவி மக்களிடத்தில் வைத்த காதல் மற்றொன்று; "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற தேவாரத்திலே சொல்லப்பட்டது போன்ற காதல் தெய்வத்தின் மேற் கொண்ட காதல்; மற்றக் காதலுள் தலைவன் தலைவியர் பரஸ்பரம் கொண்ட காதல் தான் அகப்பொருள் நூல்களிலும் பழைய சங்கநூல்களிலும் எடுத்து விரித்துச் சொல்லப் படுவது. தெய்வத்தின்மேல் வைத்த காதலையே தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைத் திரட்டும், இன்னும் அருணகிரிநாதர் தாயுமான சுவாமிகள் முதலாம் பெரியர் செய்த தோத்திரப் பிரபந்தங்களும் எடுத்துப் பிரதிபாதிப்பன. இப்பன்னிரு திருமுறைகளும் தோத்திரப் பிரபந்தங்களும் பாராயணஞ் செய்வோருள்ளத்திலே தெய்வபத்தியைக் கிளரச்செய்து இறைவனை வணங்கித் துதிக்கும்படி தூண்டி, அப்படிப் பாராயணஞ் செய்வோரை இம்மையில் இறைவன் திருவருளில் திளைக்கவைத்து அவர்களைப் பரகதிக்கு ஏற்றும் ஏணியின் படிகளாய் அமைந்துள்ளனவாகும். இதுவே மேலே சொல்லப்பட்ட திருமுறைகளையும் பிரபந்தங்களையும் பற்றி அறிஞர் கொண்டுள்ள அபிப்பிராயமாகும். அப்படியான அறிஞர் கொண்ட அபிப்பிராயம் முழுவதும் நிசமென்பதை இக்காலத்திலுள்ள மக்களுட் சிறந்தோர் தங்கள் அநுபவத்தோடும் ஒட்டிப் பார்த்துச் சரியெனக் கொண்டுள்ளார்கள். இறைவன் அன்பர் பாட்டைக் கேட்டுத் திருவுளமிரங்கித் தம்மைப் பாடும் அன்பருக்கு அருள்புரிவானென்பதே பெரிய புராணம் முழுவதையும் படித்துக் கண்ட பிரதான இரகசியமாம். இந்தக் கொள்கையை அருணகிரிநாத சுவாமிகளும்,

> "மொய்தாரணிகுழல் வள்ளியை
> வேட்டவன் முத்தமிழால்
> வைதாரையுமங்கு வாழவைப்
> பான்......"

என அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இறைவனிடத்து வைத்த காதலால் இயண்டுத் தேவார திருவாசகங்களையும் ஏனைய திவ்விய பிரபந்தங்களையும் காலந்தோறும் பாடியருளிய மகான்கள், பிந்திய காதலை - அதாவது பெண்கள் சம்பந்தமாகவுள்ள காதலைப் புறக்கணித்தே பாடியிருக்கின்றார்கள்; காரணம் இந்த நிலையற்ற காதல் அந்த நிலையுள்ள காதலுக்கு மாறாகவும் இடையூறாகவுமுள்ளதென்பதேயாம்.

மகளிர்பாற் செல்லுங் காதலைத் தவிர்த்து, தெய்வமே, உன்னிடத்தில் அக்காதல் படியும்வண்ணம் திருவருள் செய்யென்று வேண்டுவதே மேலே சொல்லப்பட்ட மெய்யடியார்களுடைய பிரதான வேண்டுகோளென்பதை நன்கு விளங்க எடுத்துக் காட்டிப் பின் வருமாறு பாடியுள்ளார் தாயுமான சுவாமிகள்:—

> "தெட்டிலே வலியமட மாதர்வாய்
> வெட்டிலே
> சிற்றிடையிலே நடையிலே
> சேலொத்த விழியிலே பாலொத்த
> மொழியிலே
> சிறுபிறை நுதற் கீற்றிலே
> பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
> பொடியிலே யடியிலே மேற்
> பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
> புந்திதனை நுழைய விட்டு
> நெட்டிலே யலையாமல் அறிவிலே
> பொறையிலே
> நின்னடியர் கூட்டத்திலே
> நிலைபெற்ற வன்பிலே மலைவற்ற
> மெய்ஞ்ஞான
> ஞேயத்திலே யுனிரு தாள்
> மட்டிலே மனதுசெல நினதருளும்
> அருள்வையோ
> வளமருவு தேவை யரசே
> வரைராச னுக்கிருகண் மணியா
> யுதித்தமலை
> வளர்கா தலிப்பெ ணுமையே"

இங்கே தாயுமான சுவாமிகள் "நினதருளும் அருள்வையோ" என உம்மைகொடுத்து இறைவியை வேண்டியதற்குக் காரணம், பெண்பாலாரிடத்துச் சத்தியின் அமிசம் அதிகமுண்டென்றும் அந்த அமிசமே திடசித்தமுடைய ஆடவனுடைய உள்ளத்தையும் தம்மிடத்திலே இழுப்பதென்றும், ஆனதால் இறைவனுடைய திருவருளோடு இறைவியின் திருவருளும் சேருமேயானால் தம்மனத்தை மகளிர்பாற் செல்லவொட்டாது தடுத்து விடுதல் இலகுவிலாகுமென்பதும்பற்றியேயாகும்.

இவ்வாறு தெய்வத்தின் மீது வைத்த காதல் காரணமாக எழுந்த தோத்திரங்களை ஆசையோடு பாடுவதும், இசையோடு பிறர்பாடக் கேட்பதும், கல்வியறிவுடையவர்கள் அத்தோத்திரங்களிலுள்ள நுண்பொருள்களையும் எடுத்துக் காட்டுகளையும் இன்னபிறவற்றையும் கல்வியறிவற்ற குறைந்த மக்களுக்கு எடுத்துப் புலப்படுத்துவதும், சமய வாயகுருந்தோறும் இப்படியான அருட்பாக்களைப் பத்திரிகையில் ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டி அவைகளுட் பொதிந்து கிடக்கும் நுண்பொருளை விரித்து விளக்குவதும் புகழும் புண்ணியமுந்தருவதும் ஆன செயல்களாம். இப்படி உபயோகப்படுங் கல்வியே கற்ற தமக்கும் பிறர்க்கும் எக்காலத்துஞ் சிறந்த பயன்தருங் கல்வியாகும்; இல்லையேற் கற்றதனாலாய பயனென்கொல்!

# முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்

[ க. கி. ந. ]

II

இனி, இவ் வரன்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களாகிய (1) காப்புப்பருவம் (2) செங்கீரைப்பருவம் (3) தாலப்பருவம், (4) சப்பாணிப் பருவம், (5) முத்தப்பருவம், 6) வருகைப் பருவம், (7) அம்புலிப் பருவம், (8) சிற்றிற்பருவம், (9) சிறுபறைப்பருவம், (10) சிறுதேர்ப்பருவம் என்னும் பத்துப் பருவங்களையுந் தனித்தனி எடுத்து விளக்கப் புகுவோமாயின், பிறந்து ஏழாம்நாளிற் குழந்தைகளுக்குக் காப்பிடலென்னும் வழக்கமொன்றுண்டு; அதனையொட்டியே காப்புப்பருவம் இலக்கிய வழக்கில் வந்திருத்தல் வேண்டுமென்று கருதுதற்கு இடமுண்டு. இப்பருவம் திருமால் முதலிய தெய்வங்கள் காக்குமாறு வேண்டிக்கொள்ளுதலைக் கூறுவதாகும். திருமாலையே முதலில் வைத்து வேண்டிக் கோடற்குக் காரணம் அவர் காத்தற் கடவுளாதலேயாம். இனி, இரண்டாவதாகிய செங்கீரைப் பருவம் பொருள்தெரியாத ஒலியை எழுப்பும் பருவத்தைக் குறிப்பதாகும். குழந்தைகள் மழலையைத் தானும் ஆரம்பிக்கு முன்னர்ச் செய்யுமொலி பொருள்செய்தலின்றி வெறும் ஒலிமாத்திரமாகவே இருப்பதொன்றாகும். தொடையமைதியில்லாத ஒன்றைச் செந்தொடை என்றாற்போலச் சொல்லமைதியில்லாத கீரைச் செங்கீரை என்று வழங்கினர் போலும். கிர்—சொல். எனினும், "செங்கீரையாடுக" என்னும் வழக்குடன்மையின் அஃதோர் ஆடலாகக்கருதப்பட்டுப் பாடப்படுவதாகவுந் தெரிகிறது. இப்பருவம் செவ்விய மழலைச்சொல்லைப் பேசுதலைக் கூறுவதாகும். மூன்றாவதாகிய தாலப் பருவம் குழந்தை தாலாட்டைக் கேட்டு மகிழ்ந்து அயர்தலைக் கூறுவதாகும். தாலாட்டென்பது தாலெனமருவி வழங்குவதாயிற்று. நான்காவதாகிய சப்பாணிப் பருவம் அச்சேய் தன் இரு கைகளையும் ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கொட்டி மகிழ்தலைக் கூறுவதாகும். ஸ + பாணி சப்பாணி யென்றாயிற்று. கையோடு கை சேர்த்துக் கொட்டலென்பது அதன் கருத்து. ஐந்தாவதாகிய முத்தப் பருவம் அக்குழந்தையை முத்தமிடப் பெறுஞ் செய்கையைக் கூறுவதாகும். முத்தம் என்னுஞ் சொல் முத்தையுங் குறிப்பதாகலின, புலவர்கள் அதனைச் சிலேடையாக வைத்துக் கொண்டு அழகுறப் பாக்களை அமைப்பர். ஆறுவதாகிய வருகைப்பருவம் தளர்நடையிட்டு வரும் குழந்தையை வா என்று அழைப்பதாகக் கூறுவதாகும். ஏழாவதாகிய அம்புலிப் பருவம் சந்திரனைக் குழந்தையோடு விளையாடவாவென்று அழைத்துக் கூறுவதாகும். அம்புலி—சந்திரன். இப்பருவம் பாடுதற்கு அரியது என்றதனாலேயே "பிள்ளைக்கவிக்கம்புலி புலியாம்" என அது விதந்தெடுத்தோதப்படுவதாயிற்று. எட்டாவதாகிய சிற்றிற்பருவம் சிறுமியர் கட்டிய சிறு வீடுகளை அச்சிறுவன் அழிக்கும் ஆடலைக் கூறுவதாகும். ஒன்பதாவதாகிய சிறுபறைப்பருவம் அம்மதலை சிறுபறை முழக்கி விளையாடுதலையும், பத்தாவதாகிய சிறுதேர்ப்பருவம் அச்சிறுவன் தண்டுவண்டியுருட்டி விளையாடுதலையும் கூறுவனவாகும்.

இவ்வொவ்வொரு பருவத்திற்கும் பப்பத்துப் பாக்களைக்கொண்ட பிரபந்தமாகிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் புள்ளிருக்குவேளூரிலெழுந்தருளியுள்ள குமாரக்கடவுள்மீது ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளாற் பாடப்பெற்றதாகும். குமரகுருபரசுவாமிகளை அறியாத சைவரோ தமிழரோ இருத்தல் முடியாது என்பது எம் கருத்து. இவர் குமரிதொடக்கம் இமயம்வரை சைவம் வளர்த்த பெருங்குரவர்; சிவானுபூதிச்செல்வர்; படிக்குந்தோறும் படிக்குந்தோறுந்தெவிட்டாதஇனிக்குந் தீந்தமிழ்ச்செய்யுட்களைக்கடல் மடைதிறந்தாற்போலச் சொரிந்த தெய்வமுகில். இன்னோசைபயக்கும் இனிய செய்யுட்களைத் தந்த புலவர் பெருந்தகையாகிய இவரைப்பற்றியும் இவர் தந்தருளிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழைப் பற்றியும் ஈண்டு எம் சிற்றறிவுக் கெட்டியவரை ஒருசிறிது ஆராய்வாம்.

பிள்ளைத்தமிழுக்குரிய சில பருவங்களை அமைத்து, முதன்முதலிற் பாடினவர் பெரியாழ்வார் என்னும் வைஷ்ணவப் பெரியாராவர் என்பது ஆராய்ச்சியாளரது கருத்து. அங்ஙனமாயினும், காலத்தில் அடுத்தனவாக விளங்குவன குமரகுருபரசுவாமிகள் செய்தருளிய மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனனும் இரண்டுமேயாம். திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலிய எத்தனையோ பல பிள்ளைத்தமிழ் நூல்கள் பின் எழுந்தனவாயினும், பிள்ளைத்தமிழென்ற அளவிலேதமிழ் பயில்வாரனைவர்க்கும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் செய்தருளிய மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் இவையே முதலில் நினைவுக்குவரும். சுருங்கச் சொல்லுமிடத்து, செந்தமிழ்த்தேன் பிலிற்றப் பக்திச்சுவை கனிசொட்டச் சீரிதாகப் பாடவல்ல எம் சுவாமிகள், பிள்ளைத்தமிழ் பாடுவதிற் கைதேர்ந்தவர். அவர் பாடிய இரு பிள்ளைத் தமிழையும் படிப்போர் இதனை நன்குணர்வர்.

---

## ஸ்தல ஸ்தாபனங்களும் லஞ்சம் வாங்குதலும்

ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதையும் வழங்குவதையும் தடுக்கும்பொருட்டும் இவ் ஊழலுக்குப் பொறுப்பான அக்கத்தவர்களைத் தண்டிக்கும் பொருட்டும் ஏற்படுத்தப்பட்ட விதியைத் திருத்தமின்றிச் சட்டமாக அமைக்கும்படி அரசாங்கசபையின் 'ஏ' கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

---

## நீர்கொழும்புப் பட்டினசபைத் தேர்தல்

ஒரு வார்ட்டில் மட்டும் போட்டியில்லை

நீர்கொழும்பு நவ 10—

நீர்கொழும்புப் பட்டினசபைத் தேர்தல்கள் சம்பந்தமான நியமனப் பத்திரங்கள் இன்று உதவிமாகாணத் தலைவர் திரு. டப்ளியூ. ஏ. டி. சில்வா முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன.

9ம்வார்டுக்குத் திரு. பி. எல். டி. சில்வா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். மற்றைய 11 வார்டுகளுக்கும் போட்டியிருக்கிறது.

# பண்டைத்தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

## வீர வணக்கம்

ஒரு வீரன் தனது தேசத்தின் பொருட்டும் அரசனின் பொருட்டும் தன்னுடைய இரத்தத்தைச் சிந்துகின்றான். அவனிடம் வீரசக்தி-மனோதைரியம், உடற்பலம் அதிகமாக விளங்குவதால் அச்சக்தி கடவுளின் அருட்பெருக்கால் வந்ததென்னும் கருத்தோடு அவனைப் பூசிப்பது பழந்தமிழர்களுக்கு இயல்பாயிற்று. அவ்வணக்கத்தின் மூல காரணம் காளடைவில் மறக்கப்பட்டமையாற்போலும் பின்னர் வீரன் அவனுடைய வீரத்தன்மைக்காக வணங்கப்படலாயினன். அவனிடம் விளங்கிய கடவுளின் அருள் சக்திக்காக உரிய வணக்கம் மாறிவிட்டது. இம்மாற்றத்திற்காகச் சமயத்தை நிந்திப்பது தகுதியன்று. சமயம் மாற்றத்திற்கு காரண கருத்தாவன்று.

## மூதாதையர் வணக்கம்

இந்துக்கள் சித்தறிவு பெரிதுமுடையவர்களாதலால் அவர்கள் தங்களை பெற்றோர்களுக்கும் முன்னோர்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். அக்கடமைப்பாட்டை ஏழுதலைமுறைவரையில் மறவாமல் போற்றுகின்றனர். ஏனையோர்களைப் போல ஒருவர் இறந்ததும் அக்கணமே அவரைப்பற்றிய எண்ணங்களை மறப்பவர்களல்லர். இறந்தவரைத் தங்கள் ஆயுள்பரியந்தம் நினைத்து அவருக்குச் சிராத்தம் செய்து வேறு ஜன்மத்திற்குப் பயன் அளிக்கின்றனர். இறந்தவர்களின் வருஷாப்திகம் கொண்டாடுகின்றனர். பிறந்த நாட் கொண்டாட்டத்தில் சிரத்தை காட்டுவதில்லை. உலோகாயதர் பிறந்தநாட் கொண்டாட்டத்தையே விசேஷமாகக் கொள்ளுவதால் இறந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு, ஒன்றுங் கவனிப்பதில்லை. இது மேலைத்தேச உலோகாயதத்திற்கும் கீழைத்தேச சித்தாந்தத்திற்கும் உதாரணமாகவிளங்கும். தமது மூதாதையர்களுக்கு நன்றியறிதலைக் காட்டாது அவர்கள் வேற்றுடல் எடுப்பதற்குத் தம்மால் இயன்ற உதவிபுரியாவிடின் அவ்வான்மாக்களால் சபிக்கப்பட நேரிடும் என்னும் நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு. தம்முடைய மதத்திற் கூறப்பட்ட சிராத்த கிரியைகளைச் செய்வதில் இந்துக்கள் பெரிதும் ஆர்வமுடையவர்கள். இப்படிச்செய்வதை முன்னோர் வணக்கம் என்று கூறுவது பொருந்தாது. இந்துக்கள் தமது முன்னோர்களைக் கௌரவப்படுத்துவதுண்டு. தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அவர்களால் அடைந்த பலாபலன்களுக்காக அவர்களைப் போற்றுவது சகசம். நமது சமுதாய நன்மைக்கு இத்தகைய செய்கை நல்லதே. இறந்தவர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தால அவ்வான்மாக்களின் ஆசீர்வாதத்தைப் பெறலாமென்பது இந்துக்களின் கோரிக்கையாகும். நம்முடையபெற்றோர்களுக்கும் மூதாதையர்களுக்கும் நாம செய்யவேண்டிய கடமைகளைச் செய்தால் நமக்கு வெகுமானம் கடவுளால கொடுக்கப்படுகின்றது. நம்முடைய கடமை மூலமாக நாம பெற்றோர்கள் மூதாதையர்களிடத்துள்ள கடவுளின் அருட்சக்தியை வழிபட்டவர்களாகின்றோம். அக்கடமையின அவசியமாம அவர்கள் மூலமாகப் பெற்ற அருட்பெருக்கத்தின நிமித்தம என்று கூறற்பாலது.

நம்முடைய குரு நமக்குச் சமயத்துறையில் வழிகாட்டுவர். நமக்குச் சித்தறிவைப் புகட்டி மந்திர உபதேசம் புரியும் குருக்கள் மாராகும் சமய உபாத்தியாயர்களுக்கு மிகுதியாக மரியாதை செலுத்தி வழிபாடாற்றும்படி நமது சாத்திரங்கள் இயம்புகின்றன. நமது சாத்திரத்தின்படி கடவுளே குருவாக எழுந்தருளிவந்து மாணாக்கனைப் பரிபாகப்படுத்தி முத்திநெறி காட்டுகின்றனர். ஆதலால குருவினிடத்தே தெய்விகத்தன்மை அதிகமாக விளக்கமுறுவதாகும். அவரை வழிபடுவதால் அவரிடத்துள்ள தெய்விகத்தன்மை அல்லது கடவுட்சக்தியை வணங்கியதாகும். அவருடைய மனிதத்தன்மையை வணங்கியதாகாது. நமது சமய சாத்திரத்தின்படி குருவைக் கடவுளுக்குச் சமானமாகக் கருதல் வேண்டும்.

சித்தறிவைப் புகட்டும் குருவேயன்றி உலகறிவைக் கற்பிக்கும் உபாத்தியாயரும் வழிபடத்தக்கவரே. ஏனெனில உலகறிவு சித்தறிவோடு சம்பந்தமுடையதாதலால் பின்னதைப் பெறுவதற்குத் துணையாயிருக்கின்றது. அறிவு வளர்ச்சியில் இந்துக்கள் அதிகமாக ஈடுபட்டவர்களாதலால் தங்கள் உபாத்தியாயர்களின் நிமித்தம் தங்கள் உயிரையும் கொடுக்கத்தக்கவர்கள். எவ்வறிவும் கடவுளைக் கண்டறிய வழிகாட்டுவதாகும். அவ்வறிவைப் புகட்டும் ஆசான கடவுளின் அருட்டன்மையைக் கொண்டுள்ளவனாக இந்துக்களால் கருதப்படுகின்றனன். கடவுளின் அருட்சக்தி எங்கெங்கே துலங்குகின்றதோ அங்கங்கே அதனை வணங்கிப் போற்றுவதால் நமது எண்ணம் கடவுளின்பாற் செலுத்தப்படுகின்றது. கடவுளின் நாட்டத்திற் கிசைந்த வழிகளைப் பல விதங்களிற் றேடிக் கையாடும் இந்துக்களை என் விஞ்ஞரைப் பரிகசிக்க வேண்டும். தனது அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் மனிதன் அவ்வரசனாது அதிகாரத்தைப் பெற்ற ஏனைய உத்தியோகஸ்தர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பானென்பது திண்ணம். அஃதேபோல ஈசுர பக்தியுடைய ஒருவன் அவ்வீசுரசக்தி சிறிதளவேனுமுடைய எந்தப் பொருளையும் பூசிப்பான். அப்படி அவன் செய்யா தொழிந்தால் அவனுடைய ஈசுரபக்தி போலியாகமுடியுமேயன்றி உண்மையானதாகாது. (தொடரும்.)

# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஞ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் ஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய ஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்.

(முற்றொடர்)

(அ) ஸம்யுக்த மேதத் க்ஷர மக்ஷ
ரம் ச வ்யக்தாவ்யக்தம்
பரதே விஸ்வ மீஸ:]
அநீஸசா ஆத்மா பத்யதே போக்த்
ருபாவாத் ஜ்ஞாத்வா
தேவம் முச்யதே ஸர்வபாஸை:]

இ-ள்: க்ஷரம் அக்ஷரம் ச- அழிவுடையதும் அழிவற்றதும் என்றும், வ்யக்தம் - வெளிப்பட்டுத் தோன்றுவதும் (காரியமும்-மாயேயமும்) அவ்யக்தம்-காரணமும் (மாயையும்) என்றும் (கூறப்படும்), ஸம்யுக்தம் - இரண்டுவகையும் கூடிய, ஏதத் விஸ்வம்-இந்த உலகத்தை, ஈஸ:பரதே-சிவபெருமான் தாங்குகின்றார் (ஆளுகின்றார்), அநீஸசா ஆத்மா-அனீசனாகிய ஆன்மாவோ, போக்த்ருபாவாத் - தான் போக்தா என்னும் பாவனையினுல், பத்யதே - பந்திக்கப்படுகின்றான், தேவம் ஜ்ஞாத்வா-சிவபெருமானை யறிந்து, ஸர்வபாஸை:-எல்லாப் பாசங்களினின்றும், முச்யதே - விடுவிக்கப்படுகின்றான்.

குறிப்பு (க) "இரண்டுவகையும் கூடிய இந்த உலகத்தைச் சிவபெருமான் ஆளுகின்றார்". சிவபெருமானுக்கு உயிர்கள் அடிமையும் மாயை உடைமையுமாம். சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய உயிர்களுக்கு, அவர்களின் வினைக்கேற்ற வண்ணம் மாயையிலிருந்து தநுகரண புவனபோகங்களைத் தோற்றுவித்தது, அவற்றுளுளவாகும் சுகதுக்க போகங்களை அறிவுக்கறிவாய் நின்றுணர்த்தி யூட்டுவிப்பது அம்முதல்வனே.

"எவரால் எல்லாவற்றையும் அறிகின்றேனோ" பிரஹதா-௪-௪-௧௮ "(சிவபெருமான்) சர்வசங்காரகாலத்திலும் அழிக்கத்தக்கவர்களை அழித்து, மறைக்கத்தக்கவர்களை மறைத்து உயிர்களின் கன்மங்களைப் பக்குவப்படுத்தி மாயாசக்திகளை வெளிப்படத் தகுந்தவைகளாகச் செய்து, தோன்றுதற்குரிய எல்லாப் பொருட்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்" மிருகேந்-௪-௧௫.

"மன்னுசிவன் சன்னிதியின் மற்றுலகஞ் சேட்டிக்க, தென்னுமறையினியன் மறந்தாய் - சொன்ன சிவன், கண்ணுவுளம்வினைபாற் கண்டறிந்து நிற்குங்காண்" சிவஞானபோதம்-௫-௨, ௩.

"அருவனு யுலகமெல்லா மழித்தவையாக்கிவேறு, பொருவனே யுயிர்கட்கெல்லா முயிருமாயுணர்த்தி நிற்பன் சித்-௫-௨-௪.

"இறைவன்றன் சன்னிதிக்கணுலகின்றன் சேட்டை யென்னு மறைகளு மறந்தாய்" ௸ ௸-௫.

குறிப்பு (உ) "ஆன்மா தான் போக்தா என்னும பாவனையினுல் பந்தப்படுகின்றது" ஆன்மா பெத்தநிலையில் சுகதுக்க போகங்களை நுகருங்கால், இறைவன் தனக்கு உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த்தி யூட்டுகின்றான் என்னு முண்மையையறியாது ஆணவமலத் தொடர்பினுல மயங்கி நானேயறிந்து அநுபவிக்கின்றேனென்றும், இப்போக போகியங்கள் என்னுடையன என்றும் நினைக்கும். இந்நினைவினுல (அகங்கார மமகாரங்களினுல) போகத்தில் விருப்பும் அதுகாரணமாய் வெறுப்பும் நிகழ்ந்து அறவினை

கேதுவாய ஆகாமியம் வினைய அதனுல் மென்மேலும் பந்தம் வலுக்கொண்டு வளரும். "ஆன்மாவின் றனறிவொடு தொழிலை யார்த்து, நின்று போத்திருவத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந், தென்றுமஞ்ஞானங் காட்டு மாணவமிசைந்து நின்றே" (சித்-உ-அநிச) என்றது சிவஞானசித்தி. "எப்பொருளுமாக்குவானீசனே யெனுமுணர்வு, மப்பொருள்தானுளுடையானடியார்களெனுமறிவு, மிப்படியாலிதுவன்றித் தமிசைவு கொண்டியலும், அப்புரமில்லார் துணிவுதுகளாகச் சூழ்ந்தெழுந்தார்" (பெரிய புரா-சம்பந்தபுராணம்-௭௧)

(௩) "சிவபெருமானை அறிந்து எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகின்றான்" சிவபெருமானை யறிதலாவது, அவர் தனக்குயிர்க் குயிராயுணர்த்தி நின்றுபகரிக்கும் முறைமையைத் தன்னறிவிலே விளங்கக்காண்டல். அங்ஙனங்காணவே, சிற்றறிவினையுடையதான் யாதானுமொன்றைச் சார்ந்து நின்றறியும் பாதந்திரனுவதல்லது தனித்துநின்றறியும் சுதந்திரனல்லன் என்ற தன்னுண்மையுந் தனக்கு விளங்கும். போகசாதனமாகிய கருவிகரணங்களையும் ஏனைப்போக்கியப் பொருட்களையும் நிறுத்தி அவற்றில் தன்னை நியமிக்கின்ற அவரது பெருங்கருணைத் திறத்தையும் காணும். இவ்வாற்றால் "சடமும் சித்துமாகிய இருவகையும் கூடிய இந்த உலகத்தைச் சிவபெருமான் தாங்குகின்றார்" என்று சுருதி கூறிய உண்மை சுவானுபவமாம்-இந்நிலையில், சடமும் சித்துமாகிய எப்பொருளும் அவரது வியாபகத்துளடங்கி வியாப்பியமாய் நிற்றலின் தான் தன்னறிவினுற் சென்று பற்றுதற்கும் விடுதற்கும் அவரையின்றி யொன்றுமில்லையென்றும் எல்லாம் அவர் செயலே யென்றும் காணுகின்ற "இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினையின்றே"

"சூரியனுமாசான் வந்தருளாற் றோன்றவடி ஞானமாவிற் றோன்றத், தூரியனுஞ் சிவன்றோன்றத் தானுந் தோன்றத்தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளேதோன்றும், நேரியனுப் பரியனுமாயுயிர்க்குயிரா யெங்குநின்ற நிலையெல்லா முனிகழ்ந்து தோன்றும்"

(சித்தி-௮-௨-௨-௮.)

"மங்கை பங்ககங்கை நாயகநின்
தெய்வத்திருவருள் கைவந்து
கிடைத்தலின்
மாயப்படலங் கீறித்தூய
ஞானநாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந்தன்மையுங் கண்டேன்
காண்டலும்
என்னையுங் கண்டேன பிறரையுங்
கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டே
னென்னே
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங்காணுத்தகைமையோரே.

(பட்டணத்துப்பிள்ளை திருவிடைமருதூர் மும்மணிக் கோவை—௧௩.)

"இன்றெனக் கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தேனீ யாற் பிறிதுமற்றின்மை, சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந் துறையுறைசிவனே, யொன்று நீயல்லையன்றி யொன்றில்லை யாருன்னை யறிகிற்பாரே. (திருவாசகம்)

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# மணிப்பிரவாள வசனம் 4

(திரு. அ. வி. மயில்வாகனம், ரேயல்கல்லூரி)

(முற்றொடர்)

இனி, நின்னை, யார் எனுஞ்சொற்களை 'உன்னை ஆர், என்று விளக்குகிறார் ஆசிரியர்.' இவற்றுள் முன்னைய வழக்கு இரண்டும் மிகப்பழையன, பின்னைய மிகப்புதியன எனக. ஆதலின், அவருடைய காலத்தில் அப்பழையனவற்றை இப்புதியனவற்றால் விளக்கவேண்டியதாயிற்று. நாம் முன் கண்டாற்போல இங்கும் சில சொற்களின் விளக்கம் வரும்:-நீர்—ஜலம், ஆழ்—கம்பீரம், தண்—மநோஹரம், ஆமை—கூர்மம், கடல்—ஸமுத்ரம், ஆறு—ஷட்கம், என்பன அவை. இவ்வுரையின் நடைக்கு உதாரணம்:— (ப. 125) "வஞ்சனத்து வந்த பேய்ச்சியாவிபாலுள் வாங்கினை, மண்ணளந்துகொண்ட காலனே—" என்றவிடம், குவலயாபீடத்தைப் போலேயும் கம்ஸனைப்போலேயும் எதிரியாய்த் தோற்றுகையன்றிகே தாய்வடிவுகொண்டு வஞ்சனையாலேவந்த பூதனையினுடைய பிராணனைப் பாலோடேகூட வாங்கினாய், அவளும் தானாய் முலைகொடுக்க வந்தாள். இவனும் பிள்ளையாய் ஆதரத்தோடே அம்முலைப்பாலை அமுது செய்தான்."

இப்பந்தியை ஊன்றி நோக்கும் பொழுது 'வாங்கினாய்', என்னும் வினைமுற்றுவரைக்கும் முன்னிலையிடமும், அதன்பின் படர்க்கையிடமும் வருகின்றன. "அவளும், இவனும்"- என்னும்போது அவை முன்னைய தொடருடன் பொருந்தாவாயின. இவ்விடமாற்றம் சிலவேளை தடுமாறவும் செய்துவிடும். சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர்குரவையுள்- 'திரண்டமரர் (IInd Person) என்பதையும் 'மூவுலகும் ஈரடியால (IIIrd Person) என்பதையும் நோக்குக.

அஷ்டாதச இரகசியம்:—இதன் ஆசிரியர் பிள்ளை லோகாச்சாரியர் என்பவர்; ஓம் நமோநாராயணாய" என்னும் மூலமந்திரத்தின் உட்பொருள் விளக்கும் இந்நூல். ஓமெனுஞ் சொலிற்கு மாத்திரமே 10 பக்கங்களில் விளக்கம் உண்டு. அதன் பின் 18 இரகசியங்கள் விளக்கப்படுகின்றன. இவற்றின் உட்பொருள் ஆராயின், வைணவ தத்துவங்களின் வலிய தேர் வலையுள் அகப்பட்டுத் தத்தளிப்போம். இற்றிலே, கீதையின் சரமசலோகம்கூறி அதன் விளக்கமும் தரப்பட்டுள்ளது.*

இவ்வுரையினின்றும் ஒன்று விளக்கமாகின்றது. 'இறே' என்னும் முடிபு எடுத்தது காட்ட என்பது. + த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே? ஆயினும பணிசெய்வது சிறுறுனிக்கிறே! etc என்னும் பொழுது அதனைக் கண்டாம். 'அன்றே'யிலிருந்து 'இறே' வந்தாற்போல, 'கின்றாய்', 'கின்றீர், என்பனவற்றிலிருந்து கிடாய், கிடீர்' என்றுவ எனக. இனி, புடைவை' என்று இங்கே கூறியது ஏனாழுவதயோனுமோர் விழுக்காடமெனக. %

ஆசாரிய ஹிருதயம்:— இதற்கு உரை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் 13-ம் நூற்றாண்டு வரையில் எழுதினர். இவர் நம்மாழ்வாரின் உத்தம சிஷ்யர்போல்வர். இதன் சிறப்பு ஒன்று என்னவானால் இதனுள்வரும் ஒவ்வொரு சொல்லும் நம்மாழ்வாரால் முதலில் உபயோகிக்கப்பட்டமை என்பது. அப்படிச் சொற்களைவிட வேறு சொல் இவ்வாசிரியர் வழங்கார். ஆதலின் அவருக்கு நம்மாழ்வார்மேலுள்ள ஆழ்ந்த பற்றுத் தோன்றும், எனினும் அவருடைய பாட்டுக்களுள்வந்த சொற்களை மாத்திரமே பிரயோகிப்பதால் அரும்பதவிளக்கத்திற்கு அன்னியசொல் ஒன்றும் பாவியாதுவிடுவர். சொற்பெருக்கும் இராது. சிறந்த விளக்கமும் தருதல் கஷ்டமெனபது சொல்லாமலே விளங்கும். இனி வசனநடையும் சீர்பெறுது.

இதற்கு அர்த்தம், வியாகரணம் என்று இரண்டு உரைகளுள. இவற்றுள் முன்னையது சுருக்கவுரை, பின்னையது விரிவுரை. இவ்வுரையின்மேல் விளக்கம் அதிகம் இராது. பின்வரும் வசனத்தால் இவ்வுரையின் விளக்கமட்டம் விளங்கும். (P 13) "இவை கிட்டும் வேட்டு வேளானும்போலே ஒண்பொருளல்லாதவையென்று தோன்றிலாதயானும் உளனாவனென்கிற ஸாம்யம் பெறத்தின்றுதி ஆத்தமும் வாழ்வுமாகிற ஹாநிவிருத்திகளையுண்டாக்கும்." இதனை ஒரு வசனமென்பர்! இதன் முழுக்கருத்தையும் அறியச் சுழிபோடினனும் முடியாது!

வியாக்கியானத்துள், ஒவ்வொரு சொல்லிற்கும் கருத்துத் தரப்பட்டுள்ளது. அச்சொல் எல்லாம் நம்மாழ்வார் பிரபந்தத்துள் காணப்படுவனவே. இதனுள் சில குறிப்புக்கள் தெலுங்கு மொழியில வந்துள. தனித்தமிழ்ச்சொற்களாகிய 'தனியன், சொல்லுகிறபடி' என்பன, தங்யன், ஸொல்லுகிறபடி என்று எழுதியுள. இது தமிழிற்குச் சங்காபிஷேகம் செய்வது போல் தோன்றுகின்றது. இந்த, ஆந்த, ஆக, ஐ, ஆல்—முதலியனவற்றைவிட, வேறு தனித்தமிழ்ச் சொற்கள் காண்பது அருமை. சிலவிடங்களில் தமிழ் ஆபாசமாயிருக்கும். உ-ம்:- (P. 13) இந்த நாராயணத்துவப்ரயுக்த பிதா புத்ர சம்பந்தம் த்ரைகுண்ய விசிஷ்ட சேதனனிலேது.

வேறோரிடத்தில் இவ்வாசிரியரே "சம்ஸ்கிருதமும் த்ராவிடமுமாய் ஏகபாஷையாய் அக்நியோந்யமாயிருக்கவேண்டாவோ?" என்கிறார். இவ்வெண்ணத்துடனேயே அக்கால உரையாசிரியர், இறந்துபட்ட சங்கதத்தைத் தமிழுட்புகுத்தி மணிப்பிரவாளத்தை உண்டாக்கிச் சங்கடப்பட்டனர்போலும்! வீண் மோகம்!.

ஸ்ரீவசன பூஷணம்:—இதற்கு ஆசிரியர் பிள்ளை லோகாச்சாரியர்; உரையாசிரியர் ஜீயர் என்பார். ஏனைய உரைகளைப்போலவே இதனுள்ளும் பல கிராமியச் சொற்கள் இருக்கின்றன. இவ்வசனத்திற்குப் பிரத்தியேகமான ஒரு நடையும் இலக்கணமும் உண்டுபோலும்! ஸப்பம், மூலே, அத்யயநம, ஸித்தம் என்பன இதனுட் பெரும்பாலனவற்றிற்கு உதாரணம். இவை பிறவுளுள்வாரா. ஒரு வசனம் வரும்:-ஸ்மர்தியாலே பூர்வ பாகத்திலர்த்தமறுதியிடக் கடவது இவற்றில் எத்தாலே எந்தபாகத்திலர்த்தம் அறுதியிடக்கடவதென்ன அருளிச்செய்கிறார். (ஸ்மர்தியாலே என்று தொடங்கி.) வரும்

*. Gita 18th Discourse No. 66.

+ B. 212

% See Parimelalagar - Kural

# பண்டைத் தமிழர் நாகரிகம்

(கோழும்புத்துறை, பண்டிதர். வி. கே. பி. நாதன்)

முற்றொடர்.

இனி, திணைவகையாற் பகுக்கப்பட்டோர் ஐந்து வகைப்படுவர். மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை என ஐந்துவகையாகத் திணை பிரிக்கப்பட்டபடியே அவ்வத்திணைக் குரியோர் தொழிலாலும் நிலையாலும் வேறுபட்டிருந்தனர். மருதத்திணையாவது, வயலும் வயலைச் சார்ந்த வயற்புறங்களுமாம். இந்நிலத்து மக்கள் உழவர் கடையியர் எனப்படுவர். அவர்களது தொழில் உழவுத்தொழிலாம். இந்நிலத்தின் கடவுள் இந்திரன். இந்திரன் மழைக்கதிபதியாதலின், இந்நிலமக்கள் மழைவேண்டி அவனை ஆராதித்து விழாச்செய்வர். அவ்விந்திரவிழாச் சிறிதாகவும் பெரிதாகவும் வருடந்தோறும் நடக்கும். அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவே மிகப் பெரிதாம். முல்லைநிலமாவது, காடும் காடு சேர்ந்த இடமுமாம். இந்நிலத்து மக்கள் ஆயர், இடையர், பொதுவர் எனப்படுவர். பசுக்களை வைத்து வளர்த்து வருவதே அவர் தொழிலாம். சிற்சில சமயங்களில் ஏறுதழுவி விளையாடித் தம் வன்மையை வெளிப்படுத்துவர். பால், தயிர் முதலியவற்றை விற்று ஊதியம் பெற்று வருவர் அந்நிலத்து மகளிர். அவர்கள் ஏறுதழுவலில் போராண்மையினை உடையானையே மணஞ்செய்வர். இந்நிலத்திற்குத் திருமாலே கடவுள். ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழில் இடைத்தொழிலுக் குரியோனாகிய திருமாலைத் தம் நிலத்துத் தெய்வமாகக் கோடலின், அந்நிலமக்கள் இடையரெனப்பட்டார். குறிஞ்சிநிலமாவது, மலையும் மலைசார்ந்த இடமுமாகும். இந்நிலமக்கள் குன்றவர், குறவர், எயிற்றியரெனப்படுவர். அவர்கள் தினையைப் பயிர் செய்து தேனையும் தினைமாவையும் கலந்து உண்ணும் இயல்பினர். வள்ளிக் கிழங்கினையும் உண்பர். அகில், சந்தனம், மணி, தேன் முதலிய மலைபடு திரவியங்களையெல்லாம் மற்றைநிலத்தினருக்குக் கொடுத்து அவர் பொருள்களை அவற்றிற்கு ஈடாகப்பெற்று வருவர் மிக்கவீரர்; சுதந்தர வாழ்க்கையினர்? அஞ்சா நெஞ்சினர். இந்நிலத்திற்குக் கடவுள் குமரன். அவர்கள் குமரனை வழிபடும் முறைக்கு 'வெறியாட்டு' என்பது பெயர். நெய்தல் நிலமாவது, கடலும் கடல்சார்ந்த இடமுமாம். இந்நிலமக்கள் உமணர், பரதவர், நுளைச்சியர் எனப்படுவர், அவர்கள் தொழில் கடலினுள்ள மீனைப் பிடித்து விற்றல், உப்புபடுத்தல் முதலியனவாம். பாலைநிலமாவது, முல்லைநிலமும் குறிஞ்சி நிலமும் நிலைதிரிந்து வெறும் பாலைவனமாயிருப்பதாம். வெம்மைக்கோர் புகலிடமாய் விளங்கும் இந்நிலத்து மக்கள் வேடுவர் எனப்படுவர். அவர்களது தொழில் ஆறலைத்தலே. இந்நிலத்தின் தெய்வம் காளி. இவ்வாறு ஐந்திணை மக்களும் அவ்வந் திணைக்குத் தக ஒழுக்கமும் நிலையும் வேறுபட்டிருப்பர்.

தமிழர் பண்டைய விவாகமுறை மிக அழகானது. அந்தணர் பெரும்பாலும் தாய்தந்தையர் ஆராய்ந்து செய்விக்கும் விவாக முறையைக் கொள்வர். அரசரோ எனில், அந்தணர் மணவினைமுறையையும், தாமே ஆராய்ந்து கொள்ளும் காந்தர்வ முறையினையுங் கொள்வர். வணிகரும் வேளாளரும் அவ்விதமே. மற்றவரோ எனில் காந்தர்வமுறையினையே முதலாகக் கொள்வர். முடிவாகக் கூறுமிடத்து இவ்விருவகை மணவினைகளையே தமிழ்மக்கள் கொண்டிருந்தனர். உண்மையான அன்பினுல் விதிகூட்டக் கூடி விவாகஞ் செய்துகொள்ளுதலின், சிறிதும் வேற்றுமையின்றியே இல்லறம் நடாத்திவந்தனர். மகளிர் அறிவறிவதற்கு முன்னும் அறிந்தபின்னும் மணஞ்செய்து கொள்ளுவர். இங்ஙனம் அன்பின்வழிப்பட்ட பெண்டிர் கற்பொன்றே தம் ஆபரணமாகக் கொண்டிருந்ததால் தம் தலைவன் மரித்தபோது தாமும் உயிர் விடுதலையே விரதமாகக் கொண்டிருந்தனர். உயிர்விடாதுபோயினும் தாமுள்ளவரை தலைவனை நினைந்து கைம்மை நோன்பியற்றுவர். அக்காலத்துத் தமிழ்மாதர் கற்பின் திறத்தை யாரே அளவிட்டுரைக்கவல்லார்!

இனித் தமிழ்மக்கள் கடவுட் பேணலும் ஆன்ம உணர்ச்சியும் மிக்குடையராயிருந்தனர். தெய்வம் போற்றல் நிலத்திற்குத் தக்கபடி சிறிது வேறுபாட்டினை யடைந்திருந்தது. தெய்வபக்தி மிக்காரையும் கற்பின் மகளிரையும் தெய்வத்தினும் மேலாகக் கருதிவந்ததைப் பழந்தமிழ் நூற்களுள் பரக்கக் காணலாம். சமயங்களில் அரசர்களுக்குப் புலவர்கூறும் அறவுரைகளை நன்கு நோக்கின், பண்டைத் தமிழர் எத்துணை ஆன்ம உணர்ச்சியினர் என்பதை நன்கறியலாம்.

இவ்வாறு பண்டைத் தமிழர்கள் நாகரிகச்சிறப்பினை இந்நெடுங்காலங் கழிந்தும் ஒருவாறு அறிவதற்கு உதவியாயிருப்பன, அக்காலத்து அருந்தமிழ் வாணர்கள் அருளின் இயற்றிய நூற்றொகைகளே. அவைகளே சங்கநூல்கள் என வழங்கப்படும்.

இனி, இத்தகைய சிறப்புடைத் தமிழர் யாவர் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். பண்டைத் தமிழரையும் அவர் வரலாற்றையும் பலர் பலவிதமாய்க் கூறுவர். ஆசியாக் கண்டத்திலிருந்து போந்த மங்கோலியருள் ஒரு வகுப்பினரெனவும், கங்கைக் கரையிலிருந்து ஆரியரால் துரத்தப்பட்டுத் தென்னாடு நோக்கி வந்த நாகரிகமற்ற ஒருவகைச் சாதியாரெனவும், தெற்கே கடல்கொள்ளப்பட்ட லெமூரியாக் கண்டத்தினர் எனவும், மற்றும்பல வாறுங் கூறுவர். இக்கூறிய ஒவ்வொரு சாராரும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்திற்குத் தக்கவாறு சிற்சில ஆதாரங்காட்டுவாராயினும், அவர்கள் பலவேறிடங்களினின்றும் ஈண்டு வந்தபொழுது இத்தமிழ்நாடு நிர்மானுஷ்யமாய் இருந்ததா என்ற விஷயத்தைச் சிறிதும் கவனிக்கவில்லையென்றே தோன்றுகிறது. அவருள் லெமூரியாக் கண்டத்தினின்றும் போந்தார் தமிழர் என்று கூறுவாரது கூற்றையாவது சிறிது ஒப்பலாம். ஏனெனில் அதுவும் ஒருகாலத்தில் தமிழ் நாடாய் இருந்ததுவே காரணம். ஆனால், அவர்கள் தங்களிடத்தைவிட்டுப் பெயர்ந்து வருவதற்குக் கடல்கொண்டதைத் தவிர வேறு காரணமில்லை. அவர்கள் வருவதற்குமுன் இவ்விடம் மக்களின்றி யிருந்தது என்பது பொருந்தயின்றும். இதைவிட அகத்தியர், வேளிர் உள்ளிட்டார் பலரைத் தம்முடன்கொண்டு தென்னாடு போந்து காடுகெடுத்து நாடாக்கித் தமிழ்நாடு கண்டனர் என்றவோர் புராண வரலாறும உண்டு. இக்கூற்று எத்துணை உண்மையோ, அத்துணை உண்மையே மற்றவைகளும். ஆகவே, தமிழ்மக்கள தமிழ்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பிரிட்டிஷாரைக் கலந்து கொள்ளவில்லை

### லெபனன்பற்றி லண்டன் அபிப்பிராயம்

லண்டன், நவ, 12—

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றித்தான் லெபனனில் பிரெஞ்சு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டனரென்று உத்தியோக வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தப் பகுதியிற் குழப்பம் இருப்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதிக்க முடியாது. இது சம்பந்தமாகப் பிரெஞ்சுத் தேசிய விடுதலைக் கமிட்டியோடு சம்பாஷிக்குமாறு அல்ஜியேர்ஸிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானிகர் உத்தரவிடப்பட்டிருக்கிறார்.

#### பிரிட்டனின் உறுதி

ஸிரியாவுக்குள் நேசதேசப்படைகள் பிரவேசித்தபோது லெபனனுக்குச் சுதந்திரம் கொடுப்பதாக நேசதேசங்கள் கொடுத்த வாக்குறுதியில் பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக லண்டனிலிருக்கும் உத்தியோக வட்டாரங்களில் வெளியிட்ட ஓர் அறிக்கை கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது:—

"பிரெஞ்சு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பிரிட்டிஷ் அதிகாரிகளோடு கலந்துகொண்டோ அல்லது அவர்களுக்கு அறிவித்துவிட்டோ எடுக்கப்பட்ட நடவடிக்கையல்ல. இது சம்பந்தமாக லெபனனிலிருக்கும் பிரஞ்சு ஹைகமிஷனர் தம்மோடு கலந்து பேசுவதற்காகப் பேரட்டிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானிகர் ஸேர். எட்வர்ட் ஸ்பியேர்ஸ் பிரஞ்சுப் பிரதிநிதியிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறார். பிரெஞ்சுக் கமிட்டியோடு இதுபற்றிப் பேசுவதற்காக அல்ஜியேர்ஸிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானிகருக்கு இப்போது உத்தரவிடப்பட்டிருக்கிறது.

---

### கடிதம்

இந்துசாதனப் பத்திராதிப!

தங்கள் பத்திரிகையில் அரசமர வழிபாட்டைப்பற்றி ஐயர் ஒருவர் எழுதுவது கண்டு மிகவும் உள்ளம் நொந்தேன். ஆரியர் வருமுன்னமே மாய்ந்தர் நகரில் (Mohenjo Daro 1500 BC)யில் திராவிடர் அரசமரத்தை வணங்கத் தொடங்கிவிட்டனர் என்பதையும் அரசிற்கும் முக்கட்செல்வனுகிய முழுமுதற் கடவுளுக்கும் அப்பொழுதுதானே தொடர்பு உண்டாய்விட்டதென்பதையும் இவர் அறியாதது இரங்கத்தக்கது. ஆரியக் கொள்கையினராகப் பின்தோன்றிய சிலர் எழுதிவைத்த புராணங்களை வரன்முறைக்கு ஆதாரங்களாகக் கொண்டு அரசமரம் பிராமணனையும் வேப்பமரம் பிராமணத்தியையும் குறிக்குமென்று எழுதினுல் இதற்குக் கழுவாய் இல்லையோ? மாய்ந்தார் நகரச் சிலையுருவங்களிற்றானே கொற்றவை வடிவமும் அதன் பக்கலில் அரசமரமும் காணின்றன. மத்தியரேகைக்கு கிட்டவுள்ள நாடுகளுக்கே சிறப்பான வேப்பமரம் பின்பு வணங்கப்படலாயது. புராணங்கள்-பெரிய சமய தத்துவங்களைக்கதைமூலம் பாமரருக்கு விளங்கவென்று எழுதப்பட்டன. அவை உண்மைக்குப புறம்பானவையெனவறிக.

அ. வி. ம.

## க்ஷயரோகத் தடை வேலை

### எக்ஸ்ரே படம் பிடிக்கும் உபகரணம்

#### வைத்தியப்பகுதி வாங்கவிருக்கிறது

க்ஷயரோக நோய்பற்றிய பரிசீலனை நடத்துவதற்குப் பெருவாரியான எக்ஸ்ரே படங்கள் பிடிப்பதற்கான ஒரு உபகரணத்தைப் பெறுவதற்கான ஹேதுக்கள் வைத்தியசுகாதார இலாகா ஆராய்ந்து வருகிறதென்று அறியப்படுகிறது.

இந்த உபகரணத்தைக்கொண்டு ஒரு நீண்ட பில்மில் தொடர்ச்சியாக அநேக சிறிய படங்கள் பிடிக்கமுடியும். அதை ஒரு பொறியில் இணைத்துப் பிரயாணஞ் செய்யும் எக்ஸ்ரே உபகரணமாக உபயோகிக்க முடியும்.

இந்த உபகரணம் நியூஸிலந்திற் சில தேவைகளுக்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அந்த உபகரணம் பற்றி அங்கு விசாரிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இந்த உபகரணம் ராணுவத்தால் உபயோகிக்கப்படுகிறது.

இப்போதைய நிலைமைகள் காரணமாக இலங்கைக்கு அத்தகைய உபகரணம் ஒன்றோ அல்லது அதற்கதிகமாகவோ கிடைக்கச் சிறிதுகாலம் பிடிக்குமென்று உணரப்படுகிறது.

க்ஷயரோகத் தடை வேலையில் விசேஷ பயிற்சிபெற்ற வைத்திய சுகாதார இலாகா அதிகாரிகளில் ஒருவர் கோட்டை டிஸ்திரிக்கில் க்ஷயரோகப் பரிசீலனை நடத்தும்படி கேட்கப்பட்டிருக்கிறார்.

#### க்ஷயரோகத் தடைச் சங்கங்கள்

கொழும்பை அடுத்துள்ள கிராமாந்தரப் பகுதிகளில் க்ஷயரோகத் தடைச்சங்கங்களை ஏற்படுத்திப் பின்னர்க் கொழும்பில் ஒரு மத்திய க்ஷயரோக தடைச்சங்கத்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பரிசீலனை நடத்த நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரி அப்பகுதியில வைத்திய சுகாதார அதிகாரி நகரசபை தனிப்பட்ட முறையில் வைத்தியத்தொழில் நடத்துபவர்கள் ஆகியோரின ஒத்துழைப்புடன் பிரசார வேலை நடத்துவார்.

இந்த அதிகாரிக்கு விசேஷ சிப்பந்திகள் உதவப்படும். கொழும்பிலுள்ள க்ஷயரோகத்தடை ஸ்தாபனத்தில் அவர் தமது பரிசீலனை சம்பந்தான விஞ்ஞானவேலையைச் செய்ய முடியும்.

#### சிகிச்சையும் பண உதவியும்

இந்தப் பரிசீலனை ஆரம்பமாவதிலிருந்து கண்டுபிடிக்கப்படும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கவும் அத்தகைய நோயாளிகளின் உழைப்பைக்கொண்டே ஜீவனம் நடத்தும் குடும்பங்களுக்குப் பணஉதவியளிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர்க் கோட்டைப் பட்டினசபை க்ஷயரோகத் தடை வேலைக்கு ஒதுக்கிய மான்யமும் ஒரு புதிய வேலைத்திட்டத்துக்குச் செலவிடப்படும்.

---

## கண்டியில் யுத்த சமாதான ஞாபகார்த்த தினம்

கண்டி நவ 21—

யுத்த சமாதான ஞாபகார்த்த தினம் நேற்று யுத்த ஞாபக சின்னத்திற் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டம் மகாயுத்த சமகாத் தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. பதினொரு மணிக்கு இரண்டு நிமிஷ மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## இலங்கையை அணுகிய சத்துரு விமானங்கள்

### வெள்ளிக்கிழமை காலையில் ஒன்று நாசமடைந்தது

வெள்ளிக்கிழமை அதிகாலை இலங்கையை அணுகிய சத்துரு விமானங்களிலொன்று நாசமடைந்தது.

இலங்கைப் பிரதம தளகர்த்தர் வெள்ளிக்கிழமைகாலை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகிறது:-

"இன்று அதிகாலைவேவுபார்க்கும் பொருட்டுச் சத்துரு விமானங்கள் சில இலங்கையை நெருங்கின. ஒரு விமானம் அழிக்கப்பட்டது. வெடிகுண்டுகள் வீசப்படவில்லை."

---

## சுவேதாசுவதரோபநிடதம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

தன்னறிவிலே சிவம் விளங்கக் காண்டல் சிவரூபம் என்றும் அருட்தரிசனம் எனறும் கூறப்படும். அவ்வருட்டரிசனத்தில் ஆன்மா மேற்கூறியவாறு தன்னுண்மையையுமறிதலால் சிவரூபத்தோடடனிகழ்வது ஆன்மதரிசன மென்பர். அதில் "கண்டவிவையல்லேன் நான்" என்று சடதத்துவங்கள் தனக்கு வேறாக நீங்கப்பெறுதலால் தத்துவ சுத்தியும் ஆண்டே நிகழும். ஆன்ம அறிவு ஏகதேசப்பட்டுச் சுட்டறிவிற்றுய் நிகழும் பெத்தநிலையில் உடல பொறிகளின் அழுந்தச் சுகதுக்கபோகம் நுகர்ந்த முறைமை போல, அப்போகானுபவமெறிதும் நோனறப்பெறுது அருளில் அழுந்திச்சிவானந்தபோகத்தை யெங்கும் கண்டனுபவிப்பது சிவதரிசனமாம். அதில இது விது எனக்காணும் சுட்டுப் போதம் பற்றறக் கழிந்துவிடுதலால சிவதரிசனத்தோடுடன் நிகழ்வது ஆனமசுத்தி யென்பர். இவ்வுயர்நிலை யெல்லாம் சைவசித்தாந்த நூலவலலார்வாய்க் கேட்டுணர்க.

"முன்னைறவினைத் தொன்மை மறந்
தோடு மனமெல்லாநீ
யென்றறிந்தா லெங்கே யியலக்கும்
பராபரமே"

"ஆணவத் தோடத்துவித மானபடி
மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ்
சாருநா ளெந்நாளே"

—தாயுமானுர்.

இப்பெருண்மைகளை யெல்லாம் தன்னிடத்தடக்கிய அடியில்வரும் மணிவாசகத்தைப் பலமுறை படித்து மகிழ்க.

"அன்றே யென்றன் ஆவியும் உடலும்
உடைமையெல்லாமும்
குன்றே யனையா யென்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோரிடையூ றெனக் குண்டோ
வெண்டோண்முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே யிதற்கு நாயகமே"

(தொடரும்)

---

## பண்டைத்தமிழர் நாகரீகம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டவரே. நாடுதோன்றிய காலத்தே அதன் மக்களும் உடன் தோன்றினர் என்பதே முறையாம். வேற்று நாட்டிலிருந்து வந்தவர் தமிழ் மக்களோடு கலந்து தமிழராயினர் என்பதும் பொருந்தும். அவர்கள் கலக்கும்பொழுதுதான் சிறிது சிறிது வேறுபாடுகள் தோன்றலாயின. பண்டைத் தமிழ்நூல்களை நன்கு ஆராய்ந்து பார்க்கின் இவ்வுண்மை வெள்ளிடைமலையாம்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் நவ 19

காலை 7-45 நீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 ராமலிங்கம் சுவாமிகள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் தண்டபாணி ஐயர் பாட்டு 9 முடிவு.

1 நதம்பம் †1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பாலுசாமி தீக்ஷிதர் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 பாலுசாமி தீக்ஷிதர் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 ஆர் தண்டபாணி ஐயர் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 டோபீ நாடகம் 8 மதாரவிலுள்ளபடி வி வி சடகோபன் பாட்டு 9-15 சினிமா இசை † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45தேசிய 10 இசைவேளை† 10-30 முடிவு.

### புதன் நவ 17

காலை 74-5 நீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷ்டி 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8–30 டி ஆர் விஸ்வநாத பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 நதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஆர் விஸ்வநாதபாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 பி வி நாகராசன் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 நாகம்மா கமலா பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 அச்சுக்தால் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பி வி நாகராசன் புல்லாங்குழல் 8-30 அமெரிக்க வாத்து 8-45 நாகம்மா கமலா பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கவிகுஞ்சர பாரதி பாடல்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு

### வியாழன் நவ 18

காலை: 7-45 நீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 இராகமாலிகை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ராஜம் மணி வயலின் 9 முடிவு.

1 நதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ராஜம் மணி வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 எம் எஸ் மோஹனும்பாள் பாட்டு 5.45 இசைப்பயிற்சி 6 எம் எஸ் மோஹனும்பாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கிராதார்ஜுனீயம் 9 நப்பின்னை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள்9-45 சமாதானத்திற்கு ஏற்பாடு 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

---

## வங்கப் பஞ்ச நிவாரண நிதி திரட்டப் பொதுக் கூட்டம்

உலப்பனை நவ 10—

வங்கப் பஞ்ச நிவாரணத்துக்கு நிதி சேர்க்கும்பொருட்டு உலப்பனை பௌத்த பாடசாலையில் இம்மாதம் 14ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2-30 மணிக்கு அரசாங்கசபை அங்கத்தவர் மிஸ்டர். ஜே. ஜீ. ராஜகுலேந்திரன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் அரசாங்கசபை அங்கத்தவர் மிஸ்டர். ஆர். ஈ. ஜெயத்திலகாவும் பல தேசபக்தர்களும் சொற்பொழிவாற்றுவர்.

# இரவல்!

(தென்புலோலியூர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்)

நமது தமிழ்மொழி பல மொழிகளைச் சிறப்புறச் செய்வதாயிற்று. தான் பெற்ற சொற்களிலும் பல வாய சொற்களைக் கரவாது பிற மொழிகளுக்குக் கொடுத்தது. மொழிகளை மாத்திரமல்லாது சமயக் கொள்கைகளையும் சீர்திருத்திப் புதிய எண்ணக் கருத்துகளை உண்டாக்கிய பெருமை நமது தமிழ் மொழிக்கு என்றும் உரித்துடையது.

கிறிஸ்து சமயம் நமது நாட்டிற்கு வந்து பெருஞ் சீர்திருத்தம் பெறுவதாயிற்று. கடவுளைப் பற்றியும் வாழ்க்கை முறையைப்பற்றியும் தமிழ்மொழி கிறிஸ்து சமயத்திற்கு அறிவுறுத்தியது. கிறிஸ்தவர்கள் தமிழைப் பயின்று தமிழுக்குத் தொண்டு செய்ய முற்பட்டார்கள். தேவன் என்று கூறிக்கொண்டு வந்தவர் தமிழர் கடவுட்கொள்கையைக் கண்டு தாம் செய்தது பிசகென அறிந்து, கடவுள் என்றே கூறத் தொடங்கி விட்டார்கள். "Bible" என்ற பெயரை விடுத்து "வேதம்" என்று தமது நூலையும் கூறுகிறார்கள். உண்மையில் "வேதம்" என்ற சொல் "Bible" என்ற சொல்லின் பொருளைத்தராது. எனினும், கல்வியறிவில்லாத சனங்களைத் தம் மதத்திற்கு இழுப்பதற்கு வசதியாக அப்படிச் செய்தார்கள். "நல்லவழிகாட்டுவோம் உடுபிடவை சம்பளம் நாளும் நாளும் தருதுவோம். நாம் சொல்வதைக் கேளும் என மருட்டிச் சேர்த்து நாணமுஞ் செய்து" கொள்வதற்கு இது நல்லதொரு வழி; சமய மாற்றஞ் செய்வதற்குப் பிரயோகிக்கின்ற தந்திரங்களில ஒன்று இது.

சமரசநோக்கு மிகுந்து வருகின்ற இக்காலத்திலே, சைவ சமயத்தவர் தமது வழிபாட்டுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு வருகின்ற "தேவாரம்" என்ற ஒரு சொல்லைக் கிறிஸ்தவர்கள் தமதுபாக்களுக்கும் இரவலாக இட்டு வழங்க முற்படுகிறார்கள்; வாதங்களையும் தொடங்க முற்படுகிறார்கள்.

"The Trinity is not an original element in christianity; like most of the other christian dogmas, it has been borrowed from other religions"—Haeckel.

கிறிஸ்து சமயத்தவர் பொன்போற் போற்றுகின்ற கொள்கைகள்கூடக் கிறிஸ்துவுக்கு 500 ஆண்டுகளின் முன்பே கிரேக்க-கிழக்குத்தேச - ஞானிகள் (Pittacus of Mytilene and others) போற்றிய கொள்கைகளாம். வோல்டையர் (Voltaire) என்னும் பிரான்சிய அறிஞர், கிறிஸ்து சமயத்தைப்பற்றிக் கூறும்போது "மற்ற சமயக் கொள்கைகளைக் களவாடி-இரந்து-சமைத்த சமயம்" என்று கூறுகிறார். அவற்றையெல்லாம் இங்கு எடுத்துக் காட்டி நமது கிறிஸ்தவ சமயச் சகோதரர்களது மனத்தைப் புண்படுத்துவது எனது நோக்கமல்ல. "தேவாரம்" என்ற சொல் "தெய்வத்தன்மை பொருந்திய பாமாலைகளையுடையதெனப் பொருள் தந்து ஆலமொழித் தொகையாய் மூவர் (அப்பர், சம்பந்தர், சுந்தரர்) திருமுறைகளுக்கு வழங்கும் காரணக் குறியாயிற்று. கிறிஸ்தவச்சகோதரர்கள் தாமும் அப்பெயரைத் தங்கள் பாட்டுகளுக்கும் இட்டுக் கொள்ள விரும்புதல் கூடாது. அது சைவர்களுடைய மனதைப் புண்படுத்துவதாகும்.

பிற சமயங்களிலே காணப்படுகின்ற கொள்கைகளை-சிறந்த சில நீதிகளை-ஒழுக்கங்களை - இரவலாகக் கொள்வதில் குறையொன்றும் இல்லை. ஆயின், இரவலாகப் பெற்றுக்கொண்டபின் நன்றியறிதலில்லாமல் இருப்பதுதான் கூடாது. ஒருசமயம்,

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்"

# சத்துரு எதிர்த் தாக்குதல்கள் தோல்வி

## இத்தாலியில் நேசப்படைகள் முன்னேற்றம்

லண்டன், நவ 5

இத்தாலியில் ஐந்தாவது சேனை பல ஜெர்மன் எதிர்த்தாக்குதல்களை முறியடித்துக் கொண்டு கொஞ்சம் புதிய இடங்களைக் கைப்பற்றியிருக்கிறதென்று வட ஆபிரிக்காவிலிருந்து இன்று வெளியான அறிக்கை கூறுகிறது. எட்டாவது சேனை போரிடும்பகுதியில் சீதோஷ்ணநிலைமையும் சத்துரு ஏற்படுத்தியிருக்கும் சேதங்களும் நம் துருப்புகளின் முன்னேற்றத்தைப் பாதித்தன. வடமேற்கு ஆபிரிக்க வெடிகுண்டு விமானங்கள் கேனிஸிற்கு அருகில் புகைரதப் பாதைகள் தாக்கப்பட்டன.

கெய்ரோவிலிருந்து இன்று வெளியான நேசவிமானப்படை அறிக்கை நேற்று நமது போர்விமானங்கள் கிரீட்டிலுள்ள சத்துரு தளங்களைத் தாக்கினவென்று அறிவிக்கிறது.

இன்று வெளியான பிரிட்டிஷ் விமானப்படை மந்திரி காரியாலய அறிக்கையொன்று கூறுவதாவது:-

நேற்றிரவு நமது வெடிகுண்டு விமானங்கள் பிரான்ஸிற்கும் இத்தாலிக்குமிடையே செல்லும் கரையோரப் புகைரதப் பாதையைப் பலமாகத் தாக்கின, கேனிஸிலுள்ள புகைரதநிலையம் பலமாகத் தாக்கப்பட்டது.

நமது மற்ற விமானங்கள் பெர்லின், ஹானோவர், ரூர் ஆகிய இடங்களைத் தாக்கின. சத்துரு கடலருகில் சுரங்க வெடிகள் விதைக்கப்பட்டன. பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலுள்ள சத்துரு விமான நிலையங்களையும் புகைரதத் தளங்களையும் தாக்கின. நமது விமானங்கள் எட்டுக் காணப்படவில்லை.

புதன்கிழமையன்றிரவு பிரிட்டிஷ் விமானங்கள் நடத்திய தாக்குதல் காரணமாக மான்ட் செனிஸ் குகைகளைவாய் அடியோடு மூடப்பட்டுவிட்டதென்று பாரி (இத்தலிய) ரேடியோ அறிவிக்கிறது. தென்கிழக்குப் பிரான்ஸிலுள்ள இக்குகைக் கணவாய் ஜெர்மானியரின் பிரதான சப்ளைப் பாதைகளில் ஒன்றாகும்.

# இந்தியாவில் ஜவுளி விலைகள் குறைவு

ஜவுளிக் கட்டுப்பாட்டு உத்தரவு பிறக்கப்பட்டது முதல் ஜவுளிகளின் மொத்த விலைகள் நூற்றுக்கு 40 வீதம் குறைந்து விட்டதாகத் தெரிகிறதென்று சென்னை ஹிந்து பத்திரிகையின் புதுடில்லி நிருபர் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:—

ஆகக்கூடுதலான 14 ரூபாய்க்கு விற்பனையான சேலைகள் இப்பொழுது 10 ரூபாய்க்குக் குறைவாக இருப்பதாக ஜனவரி மாதத்துக்கும் அக்டோபர் மாதத்துக்குமிடையே கிடைத்த விபரங்களிலிருந்து தெரியவந்திருக்கிறது. சட்டைத்துணிகளின் விலை 24 ரூபாயிலிருந்து $16\frac{1}{2}$ ரூபாயாகவும் வேஷ்டிகள் விலை 10 ரூபாயிலிருந்து $7\frac{1}{2}$ ரூபாயாகவும் லாங்கிளாத் விலை $42\frac{1}{2}$ ரூபாயிலிருந்து $31\frac{1}{2}$ ஆகவும் குறைந்துவிட்டன.

# பாதுகாப்பு (பொது) சட்டம் 37

பாதுகாப்பு (பொது)சட்டம்37-இதன் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு யாழ்ப்பாணம் வடமாகாணத் தலைவரும் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியுமாகிய றிச்சாட் மோகன் டேவிஸ் ஆகிய நான் யாழ்ப்பாண டிஸ்திறிக்குக்குள் இலங்கையில் விளையும் நெல் அல்லது அரிசி வைத்திருக்கும் அல்லது அவ்வுரிமையை யுடைய எவரும்:-

A அந்நெல் அல்லது அரிசியின் முழுத் தொகையையும் என்னுடைய பிரதிநிதிகள் அனுமானிக்க முன்பு நெற்களத்தில் இருந்து எடுத்துச் செல்லக் கூடாது என்றும்,

B நான் அல்லது என்னால் சீட்டு மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள் எவ்விதம் அவற்றை உபயோகிக்கலாம் என அறிவிக்கும் வரைக்கும் அந்நெல் அல்லது அரிசி வழக்கமாக வைக்கப்படும் கட்டடத்தில் அல்லது பண்டகசாலையில் வைக்கவேண்டு மென்றும்,

C யாழ்ப்பாணப் பகுதியில் எந்த இடத்திலிருந்தாவது வேறெந்த விடத்துக்கும் (களத்திலிருந்து பண்டகசாலை அல்லது வழக்கமாகச் சேமித்து வைக்கும் கட்டடம் உட்பட) என்னிடமிருந்தாவது அல்லது என்னால் சீட்டுமூலம் அதிகாரமளிக்கப் பட்டவர்களிடமிருந்தாவது குறிக்கப்பட்ட பிரதி மூலத்தில் அநுமதிச்சீட்டுப் பெறுமல் அந்நெல் அல்லது அரிசியையாவது அல்லது அவற்றின் ஒருபகுதியையாவது கொண்டுபோகக்கூடாதென்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

Sgd. R. M. Davies,
வடமாகாணத் தலைவரும் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியும்
யாழ்ப்பாணம் 10 கார்த்திகை 1943
Mis 156 15&18-11.43


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,36700**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Y 164 21-11-41—20-11-43 (தி)

குறைந்த விலையில் **துணிகள்** வேஷ்டிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.
**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்டோர்ஸ்**
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்.
பெரியகடை—யாழ்ப்பாணம். K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44

## விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

| | |
|---|---|
| ஒரு கலம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா 5-50 |
| கால் கலம் ரூபா 4-00 | ஒரு அங்குலம் ரூ. 1-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 15th November 1943.